*கவனிக்க.- 23.06.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2026 - 2017 ජූනි මස 30 වැනි සිකුරාදා - 2017.06.30**

*2026 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1097 |


**கவனிக்க.-** உண்ணாட்டரசிறை சட்டமூலம் 2017, யூன் மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, யூலை மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, யூலை மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1095 - B81183 - 5,403 (2017/06)

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சு

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

### இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை.

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில், இலங்கை தொழில்நுட்ப சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) சேவை வகையைச் சார்ந்த பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரல். இப்பரீட்சை கொழும்பு நகரில் தாபிக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

1. **பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :**

| தொடர் இல. | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | திறந்த | மட்டுப்படுத்தப்பட்ட |
| 01. | பூங்கா அபிவிருத்தி உதவியாளர் | 19 | 08 |
| 02. | செவிப்புல கட்புல தொழில்நுட்ப உதவியாளர் | 01 | - |
| 03 | ஆராய்ச்சி உதவியாளர் | 05 | 02 |
| 04. | தொழில்நுட்பவியல் அலுவலர் (சிவில்) | 01 | - |

மேற்படி ஒவ்வொரு பதவிக்கும் உரிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு www.botanicgardens.gov.lk இணையத்தளத்தைப் பயன்படுத்தவும்.

2. **ஆட்சேர்ப்பு முறை :**

2.1 இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை

***பரீட்சை நடாத்தப்படும் திகதி.***- இப்பரீட்சை 2017 ஒற்றோபர் மாதத்தினுள் நடாத்தப்படும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இப்பரீட்சையை ரத்துச் செய்ய அல்லது பிற்போடுவதற்கான உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது பொதுச் சேவை ஆணைக்குழுவைச் சாரும்.

2.2 ***சாதாரண நேர்முகப் பரீட்சை.***- இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்கள் - பதவிகளுக்கான விண்ணப்பதாரிகளது தகைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

3. 3.1 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III பதவியில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

3.2 இப்பதவி நிரந்தரமானது. (ஓய்வூதியம் தொடர்பில் எதிர்காலத்தில் அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்பட்டது.)

3.3 நியமனம் செயற்படுத்தப்படும் திகதியிலிருந்து 03 வருட தகுதிகாண் காலத்துக்குட்பட்டது. நியமனம் பெற்று 03 வருட காலத்துக்குள், முதலாவது தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

3.4 அவ்வாறே, 2014.01.21 ஆந் திகதிய 01 / 2014 ஆம் இலக்கங்கொண்ட பொது நிர்வாக சுற்று நிருபத்தின் படி இரண்டாவது அரச கரும மொழியிலான உரிய தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (இலங்கை தொழில்நுட்ப சேவையின் விதிமுறைகளுக்கேற்ப)

4. **சம்பள அளவுத்திட்டம் :**

4.1 ***சம்பளப் பிரிவு இலக்கம் :*** (MN 3 - 2016)

***சம்பள அளவு :***

ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550.

5. **வயதெல்லை.**- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு :

குறைந்த வயதெல்லை — 18 வருடங்கள்.

கூடிய வயதெல்லை — 30 வருடங்கள்.

அதன் பிரகாரம் 1999.07.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1987.07.31 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்கள் மாத்திரமே இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

6. ***உடல் தகைமைகள்.***- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றவும் பதவியின் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமையுடன் இருத்தல் வேண்டும்.

7. **தகைமைகள் :**

7.1 ***திறந்த ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்*** :-

| பதவி | கல்வித் தகைமைகள் |
|---|---|
| பூங்கா அபிவிருத்தி உதவியாளர் | (i) சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஒரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். |
| ஆராய்ச்சி உதவியாளர் | மற்றும்<br><br>(ii) a. பூங்கா அபிவிருத்தி உதவியாளர் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளுக்கு க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல், தாவரவியல், பௌதீகவியல், விலங்கியல், உயிரியல் முறைமைத் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக விஞ்ஞானப் பாடங்கள் மூன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் (பொது ஆங்கிலம் மற்றும் பொதுப்பரீட்சை நீங்கலாக) |
| செவிப்புல கட்புல உதவியாளர் | b. தொழில்நுட்பவியல் அலுவலர் மற்றும் செவிப்புல கட்புல தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளுக்கு க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் கணிதம் அல்லது தொழில்நுட்பவியல் துறையில் இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல், பொறியியல் தொழில்நுட்பம் அல்லது தகவல் தொழில்நுட்பம் உட்பட கணிதம் அல்லது தொழில்நுட்பவியல் துறைப் பாடங்கள் மூன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் (பொது ஆங்கிலம் மற்றும் பொதுப்பரீட்சை நீங்கலாக) |
| தொழில்நுட்பவியல் அலுவலர் | |

7.2 ***மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்.***- சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

*7.3 **திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தொழில் தகைமைகள் :-***

| *பதவி* | *தொழில் தகைமைகள்* |
|---|---|
| பூங்கா அபிவிருத்தி உதவியாளர்<br><br>ஆராய்ச்சி உதவியாளர் | தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் கீழுள்ள பயிற்சி நிலையமொன்றில் தாவரவியல் பூங்காக்கள் அலங்காரவியல் தொடர்பான இரு வருட டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியில் விவசாயம் தொடர்பான இரு வருட டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>அகொய்னாஸ் நிறுவனத்தில் விவசாயம் தொடர்பான இரு வருட டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற இரு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற இரு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>தொழில் துறைக்குப் பொருத்தமான வகையில் தேசிய தொழில் பயிற்சித் தகைமை (NVQ) மட்டம் 6 இற்கான தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல்.<br>அல்லது<br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களில் விசாரித்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லாவகையிலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல். |
| செவிப்புல கட்புல தொழில்நுட்ப உதவியாளர் | மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் பதவிக்கு உரிய துறையிலான கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகக் கற்று தேசிய தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட NVQ மட்டம் 6 இற்கான கணினி டிப்ளோமா சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களில் விசாரித்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லாவகையிலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல். |

| பதவி | தொழில் தகைமைகள் |
|---|---|
| தொழில்நுட்பவியல் அலுவலர் (சிவில்) | மொரட்டுவ பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>தேசிய தொழில் பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்).<br>அல்லது<br>தொழில் துறைக்குப் பொருத்தமான வகையில் தேசிய தொழில் பயிற்சித் தகைமை (NVQ) மட்டம் 6 இற்கான தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல். (சிவில்)<br>அல்லது<br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களில் விசாரித்து கருத்துக்களைப் பெற்றுக்கொண்ட பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லாவகையிலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல். |

08. **வேறு தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரஜைகளாயிருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் நன்னடத்தை உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

(iii) ஏதும் மதப்பிரிவொன்றின் மதகுரு பதவியை வகிக்கும் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெறமாட்டர்.

(iv) விண்ணப்பதாரி உரிய அனைத்துத் தகைமைகளையும் உரிய வயதெல்லையையும் விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு சகல வகைகளிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே சேவையில் இணைத்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவசியமான தகைமைகளை அவர் பூரணப்படுத்தியுள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

9. **எழுத்துப் பரீட்சை :-**

9.1 இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| வினாப்பத்திரத்தின் பெயர் | வினாப்பத்திர இலக்கம் | காலம் | உச்சப் புள்ளி | சித்திக்கான புள்ளி |
|---|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 1 | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| விடய அறிவு (பூங்கா அபிவிருத்தி உதவியாளர் / ஆராய்ச்சி உதவியாளர் பதவிகள்) | 2 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| விடய அறிவு (செவிப்புல கட்புல தொழில்நுட்ப உதவியாளர் பதவி) | 3 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| விடய அறிவு (தொழில்நுட்பவியல் அலுவலர் (சிவில்) பதவி) | 4 | 03 மணித்தியாலம் | 100 | 40 |

**குறிப்பு**- சகல விண்ணப்பதாரிகளும் 1 - நுண்ணறிவுப் பரீட்சை வினாப்பத்திரத்துக்கும் 2,3,4 வினாப் பத்திரங்களில் ஒன்றுக்குமாக மொத்தம் இரண்டு வினாப்பத்திரங்களுக்குத் தோற்ற வேண்டும். அவ்விரு வினாப்பத்திரங்களுக்குமான பரீட்சைகள் ஒரே நாளில் நடாத்தப்படும்.

9.2 பாடப்பரப்பு

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடப்பரப்பு* |
|---|---|
| பூங்கா அபிவிருத்தி உதவியாளர் | 1. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பூச்செடியியல் கைத்தொழிலின் பங்களிப்பு |
| | 1.1. மொத்தத் தேசிய உற்பத்திக்கு பூச்செடியியல் கைத்தொழிலின் பங்களிப்பு |
| | 1.2. பூச்செடியியல் கைத்தொழிலின் ஏற்றுமதி இறக்குமதி நிலைமைகள் |
| | 2. இலங்கையின் காலநிலை வலயங்கள் பற்றிய அறிவு |
| | 3. மண் மற்றும் தாவரப் போஷணை |
| | 3.1. மண் உடற்கூறியல், கட்டமைப்பு, பௌதீக மற்றும் இரசாயன உவர்த் தன்மை மற்றும் பயிர்ச்செய்கையில் ஏற்படுத்தும் தாக்கங்கள் |
| | 3.2. தாவரப் போஷணை, மண் தாவரப் போஷணை முகாமைத்துவம் |
| ஆராய்ச்சி உதவியாளர் | 3.3. தாவரப் போஷணை பற்றிய விஷேட விடயங்கள் |
| | 4. மரக்கறி உற்பத்தி |
| | 4.1. மரக்கறி நாற்றுமேடை முகாமை |
| | 4.2 மரக்கறி வகை வளர்ப்பு நடவடிக்கைகள், அறுவடை மற்றும் தயார்படுத்தல் |
| | 5. தேனீ வளர்ப்பு |
| | 5.1 பொருளாதார முக்கியத்துவம் |
| | 5.2 தேனீ இல்லங்களை ஆரம்பித்தலும் நடாத்திச் செல்லலும் |
| | 5.3 அறுவடை மற்றும் தயார்படுத்தல் |
| | 6. பூச்செடியியல் |
| | 6.1 பூச்செடியியல் முறைமைகளும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பத்தின் மூலம் உற்பத்தி அதிகரிப்பும் |
| | 7. நில அலங்கார முறைமைகள் |
| | 7.1 வரலாறு, பூங்கா அலங்காரவியல் அடிப்படைகள், பூங்கா அலங்காரவியலின் அங்கங்களும் முறைமைகளும், |
| | 7.2 பூமித் திட்டமிடல், இவை பற்றிய சட்டதிட்டங்கள், விதிமுறைகள் |
| | 7.3 சந்தைக்கான வெட்டுப்பூக்கள், அலங்காரத் தாவர இலை உற்பத்தியும் அவற்றை சந்தைக்காகத் தயார்படுத்தலும் |
| | 8. உயிரினப் பல்வகைமை |
| | 8.1. உயிரினப் பல்வகைமை பேணல், தாவர அடையாளம் காணலும் பெயரிடலும் |
| | 9. இழைய உருவாக்கம் |
| | 9.1. இழைய உருவாக்க முறைமையின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் கடந்த காலத் தகவல்கள் பற்றிய அறிவு |
| | 9.2. இழைய உருவாக்கத்தின் பிரயோகம் / உள்ளீடுகள், உதாரணங்கள் |
| | 9.3. இழைய உருவாக்கத்தின் நன்மை, தீமைகள் |
| | 10. தாவரத் தடுப்புக் காப்பு பற்றிய அறிவு |
| | 10.1 தாவரத் தடுப்புக் காப்பு விதிமுறைகள் பற்றிய அறிவு |
| | 10.2 தாவரத் தடுப்புக் காப்பு முறைமைகள் |
| | 11. மரபணுத் தொழில்நுட்பம் |
| | 11.1 DNA யின் முக்கியத்துவம் |
| | 11.2 மரபணு என்றால் என்ன? அதன் செயலொழுங்கு |
| | 11.3 மரபணுப் பொறியியல் நுட்ப முறைமைகளின் மூலம் தாவரங்களை மேம்படுத்துவதற்கான இயலுமை |

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடப்பரப்பு |
|---|---|
| தொழில்நுட்பவியல் அலுவலர் | 1. கட்டிட நிர்மாணக் கலை வரைதல்கள்<br>1.1 கட்டமைப்பு வரைதல்கள்<br>1.2 பலப்படுத்தப்பட்ட கொங்கிரீட் தகட்டு அத்திவாரம், இரும்புக் காப்பு, தூண்கள் ஆகியவற்றின் கட்டமைப்பு வரைதல்கள் பற்றிய அறிவு<br>2. கட்டிடப் பொருட்கள் பற்றிய விபரம்<br>2.1. சீமெந்து, சுண்ணாம்பு, கொங்கிரீட் கல், செங்கல், பலகை, சக்கைக் கல், நிறப்பூச்சுக்கள் மற்றும் வார்னிஷ் வகைகள், பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி ஆகியவற்றைக் கட்டிட நிர்மாணப் பொருட்களாகப் பயன்படுத்தும் முறைமைகள் மற்றும் அவற்றின் தராதரம் பற்றிய அறிவு<br>3. கட்டிட அளவுத் திட்டத்தைத் தயாரித்தலும் மதிப்பீடு செய்தலும், அளவுத் திட்டப் பத்திரத்தைத் தயாரித்தலும் கட்டிட நிர்மாணத்துக்குத் தேவையான கட்டிடப் பொருட்களின் அளவு, தொழிலாளர் எண்ணிக்கை ஆகியவற்றை மதிப்பிடலும்<br>4. அளத்தலும் மட்டத்தைப் பெறலும்<br>4.1 சங்கிலி அளவீடு, மட்டத்தைப் பெறல், தியோடலயிட் பாவனை பற்றியதும் மேற்பரப்பு மேசை அளவீடு பற்றியதுமான அறிவு<br>5. கட்டிட நிர்மாணம்<br>5.1 அத்திவாரம், சுவர் கட்டுதல், பலகைக் கூரை, இரும்புக் காப்பு, தூண்கள், கொங்கிரீட் தூண்கள், அத்திவாரத்தட்டு, படி ஆகியன இடப்படும் முறைமைகளும் இடப்படும் சந்தர்ப்பங்களும்<br>6. கட்டமைப்புக்கள்<br>6.1 பெயர்ச்சி விசை, நெகிழ்ச்சி விசை வரைபுகள் ஆகியவற்றை அளவிடலும் நிர்மாணித்தலும்<br>7. சேவைகள்<br>7.1 மின்சாரம், நீர், சுகாதாரம்<br>8. பாதுகாப்பு முறைமைகள்<br>8.1 வேலைத் தளமொன்றில் காணப்பட வேண்டிய பாதுகாப்பு முறைமைகள் |
| செவிப்புல கட்புல தொழில் நுட்ப உதவியாளர் | 1. நிலையான மற்றும் வீடியோ கமெரா ஒன்றின் பாகங்கள், அவற்றின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய அறிவு<br>2. கணினி ஒன்றின் பாகங்கள், அவற்றின் செயற்பாடுகள் பற்றிய அடிப்படை அறிவு<br>3. கணினி ஒன்றினுள் புகைப்படங்களையும் வீடியோக்களையும் சேமித்தல், எடிட் பண்ணுதல் மற்றும் வீடியோ நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் பற்றிய அடிப்படை அறிவும் அது தொடர்பான மென்பொருள்கள் பற்றிய அறிவும்<br>4. புகைப்படமெடுத்தல் (photography) பற்றிய தேற்ற மற்றும் பிரயோக அறிவு<br>5. வீடியோப் படமெடுத்தலும் அதன் அடிப்படைகளும்<br>6. மல்டி மீடியா உபகரணத்தின் பாகங்களும் செயற்பாடுகளும்<br>7. வானொலி உபகரணம் பற்றிய அறிவும் ஒலிப் பதிவு செய்தல் மற்றும் செவிப்புல உபகரணங்களை இயக்குதல் மற்றும் நிர்வகித்தல் பற்றிய அறிவும் |

10. எழுத்துப் பரீட்சையொன்று மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையொன்றின் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துக்கும் 40 % புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் முன்னுரிமை அடிப்படையில் வெற்றிடம் நிலவும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையானோரின் பெயர்கள் உள்ளடக்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை உரிய நிறுவனத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

10.1 ***பரீட்சைப் பெறுபேறுகள்.***- பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகளை தனிப்பட்ட முறையில் அறிவிப்பதற்கு அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளத்தில் வெளியிட இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

11. **பரீட்சை நிபந்தனைகள் :**

11.1 பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் விரும்பிய ஏதாவது ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பதாரிகள் இப்பரீட்சையின் அனைத்து

வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவத்தில் காட்டப்பட்டுள்ள மொழிமூலத்தை மாற்ற அனுமதிக்கப்படமாட்டர். அனைத்து விண்ணப்பதாரிகளும் தமக்குரிய இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் திறந்த பரீட்சைக்கும் தோற்றத் தகைமை பெற்றிருப்பின் ஒரே விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்தி விண்ணப்பிக்க முடியும்.

11.2 திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பிரிவுக்கு பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். திறந்த, மட்டுப்படுத்தப்பட்ட இரு பிரிவுகளுக்கும் தோற்றுவதாயின் ரூ. 750.00 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 2003-02-13 இல் வைப்புச் செய்யப்படும் வகையில் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு தபாலகத்திலும் அல்லது உப தபாலகத்திலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்தின் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். அதன் நிழற்படப் பிரதியொன்றை தங்களிடம் வைத்துக் கொள்வது பயன் மிக்கதாகும்.

11.3 பரீட்சைக் கட்டணமாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதோடு, வேறொரு பரீட்சைக்காக மாற்றீடு செய்யப்படவும் மாட்டாது.

**குறிப்பு**.- அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்துக்குள் நுழைய இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம், தனது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டையை மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது உரிய பதவியை வகிப்பதற்குத் தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கின்றார் என்பதை ஏற்றுக்கொள்வதாகும் என்று கருதப்படக்கூடாது.

11.4 விண்ணப்பப்படிவம் 21 செ.மீ. – 29.7 செ.மீ. அளவு கொண்ட A4 கடதாசியில் தயாரிக்கப்படல் வேண்டும். 1 முதல் 3.4 வரையான இலக்கங்களையுடைய தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும் இலக்கம் 4 மேற்கொண்டுள்ள தலைப்புக்கள் முறையே ஏனைய பக்கங்களிலும் அமையும் வகையில் தயாரித்துக்கொள்ள வேண்டியதோடு, அதற்குரிய தகவல்களை பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தில், தமது கையெழுத்தில் தெளிவாக நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழியிலான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்திராத விண்ணப்பப்படிவங்களும் முழுமையற்ற விண்ணப்பப் படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுமென்பதால், விண்ணப்பப்படிவங்களை அனுப்ப முன்னர் அவை இவ்விளம்பரத்தில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்திருக்கின்றனவா? என்பதனையும் அனைத்துத் தகவல்களும் உள்ளடக்கப்பட்டு பிழையின்றி நிரப்பப்பட்டுள்ளனவா? என்பதனையும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அது பற்றிய விபரம் விண்ணப்பப்படிவத்தில் ஒட்டப்பட்டிருக்கின்றதா? என்பதனையும் உறுதிப்படுத்திக்கொள்வதோடு, நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம் வசம் வைத்துக்கொள்ளவும் கவனமெடுக்கவும்.

11.5 ***பொய்யான தகவல்களுக்கான தண்டனை :***

விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது அதிக கவனமெடுத்து பிழையற்ற தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சை விதிமுறைகளின் படி எவரேனும் விண்ணப்பதாரி ஒருவர் தகுதியற்றவர் எனத் தெரிய வந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத்தை ரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரி ஒருவரால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் உண்மையற்றதெனத் தெரிய வந்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலாயினும் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

12.

12.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருப்பவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பர் என்ற எடுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட்பட்ட, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய பற்றுச்சீட்டுடன் பிழையற்ற வகையில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றிய பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் விடுக்கப்படும். அவ்வறிவித்தல் வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் கழிந்த பின்னரும் தமது பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் யாரேனும் இருந்தால் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் அது பற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையில் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், தனது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை பிழையின்றிக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் வசிப்பவராயின், அவ்விபரங்களுடன், பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியுமான தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்துக்கு தொலைநகல் மூலம் அனுப்பி விசாரிப்பது பயன் மிக்கதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும்போது பரீட்சைத் திணைக்களத்தால் கேட்கப்படுகின்ற ஏதும் தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தன்னிடமுள்ள விண்ணப்பப்படிவத்தினதும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் நிழற்படப் பிரதிகளையும் விண்ணப்பப்படிவத்தை தபாலிடும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டையும் தயாராக வைத்திருப்பது பயன் மிக்கதாக இருக்கும்.

12.2 பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அவ்விதிமுறைகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட வேண்டியிருக்கும்.

12.3 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரி திருப்திப்படும் வகையில் அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

- தேசிய ஆள் அடையாள அட்டை
- செல்லுபடியான கடவுச்சீட்டு

13. அரச சேவையில் / மாகாண அரச சேவையில், அரச கூட்டுத்தாபனங்களில் சேவை புரிகின்ற அலுவலர்கள் தமது திணைக்கள / நிறுவனத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல பரீட்சார்த்திகளும் தமது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக்கொள்ளல் கட்டாயமாகும். நிறுவனங்களிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை தாம் சேவை புரிகின்ற நிறுவனத் தலைவர்கள் மூலம் அத்தாட்சிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரச பாடசாலை ஒன்றின் அதிபர் / ஓய்வு பெற்ற அதிபர், தமது பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம் பெற்ற அலுவலர், ரூ. 2,40,360 அல்லது அதனை விட அதிகமான வருடாந்த திரட்டுச் சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவி வகிக்கும் பதவி நிலை அதிகாரி ஒருவர் அல்லது பௌத்த விகாரையொன்றுக்குப் பொறுப்பான மதகுரு அல்லது தலைமைப் பிக்கு அல்லது வேறு மதங்களின் மதஸ்தலமொன்றுக்குப் பொறுப்பான, முக்கிய அந்தஸ்துக் கொண்ட மதத்தலைவர் ஒருவர் ஆகிய ஒருவரைக்கொண்டு அத்தாட்சிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

14. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை, 2017 யூலை மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் எனவும் குறிப்பிடல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒரு பதவிக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை அனுப்ப வேண்டிய முகவரி :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த,
பத்தரமுல்ல.

15. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பிரயோகங்களுக்கிடையில் ஏதும் பொருத்தமின்மைகள் இருப்பதாகக் கண்டறியப்படின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

16. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருந்தால் அது தொடர்பில் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தீர்மானம் மேற்கொள்வார்.

கே.என். யாப்பா,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்.

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்,
த.பெ. இலக்கம் 14,
பேராதனை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சு**

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்

***இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017***

Open and Limited Competitive Examination for Recruitment to Grade III Technical Service Officers – 2017

பரீட்சை மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

எந்தப் பரீட்சைக்குத் தோற்றுகிறீர் ?
திறந்த -1
மட்டுப்படுத்தப்பட்ட - 2 ☐
இரண்டுக்கும் - 3
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

- பூங்கா அபிவிருத்தி உதவியாளர் - 1
- செவிப்புல கட்புல தொழில்நுட்ப உதவியாளர் - 2
- ஆராய்ச்சி உதவியாளர் - 3
- தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) - 4

விண்ணப்பிக்கும் பதவி ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)
(ஒரு விண்ணப்பதாரி ஒரு பதவிக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்)

01. 1.1 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
(உதா. :- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
.....................................................................................................................................
.....................................................................................................................................

1.2 இறுதியில் வரும் பெயர் முதலிலும், ஏனைய பெயர்களது ஆரம்ப எழுத்துக்கள் பின்னரும் வரும் வகையில் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :...............................................................................
(உதா. :- GUNAWARDHANA H.M.S.K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :..............................................................................

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

02. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்) :.......................................................................................................
.........................................................................................................................................

2.2 அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :..................................................
.........................................................................................................................................

03. 3.1 ஆண் / பெண் :
ஆண் - 0
பெண் - 1 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 விண்ணப்பம் கோரும் திகதியன்று வயது

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

3.4 தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

04. 4.1 எத்திகதியிலிருந்து மாவட்டத்தில் வசிக்கிறீர்கள் :.........................................................
4.2 உப அரச அதிபர் / பிரதேச செயலகப் பிரிவு : .........................................................
4.3 கிராம அலுவலர் பிரிவு : ..................................................................................

05. கல்வித் தகைமைகள்:-
5.1 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பற்றிய விபரம் :

(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :..........................................................................................
(ii) பரீட்சைச் சுட்டெண் :...........................................................................................................
(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2 க.பொ.த. உயர் தரப் பரீட்சை பற்றிய விபரம் :
(i) பரீட்சையின் வருடமும் மாதமும் :..........................................................................................
(ii) பரீட்சைச் சுட்டெண் :...........................................................................................................
(iii) பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

06. வேறு தகைமைகள் :.............................................................................................................................................
.............................................................................................................................................

07. நீர் எப்பொழுதாவது ஏதும் குற்றச்சாட்டொன்றுக்கு நீதிமன்றமொன்றால் குற்றவாளியாக ஆக்கப்பட்டுள்ளீரா?
( உரிய கூட்டில் (√ ) அடையாளத்தை இடவும்) ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடுக.

ஆம் ☐ இல்லை ☐

.............................................................................................................................................
.............................................................................................................................................

08. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு பற்றிய விபரம் :
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :..................................................................
(ii) பற்றுச் சீட்டு இலக்கமும் திகதியும் : ..................................................................
(iii) செலுத்திய பணத்தொகை : ..................................................................

| பற்றுச்சீட்டைக் கழராதவாறு இங்கு ஒட்டவும்.<br>(அதன் நிழற்பிரதியொன்றை தங்களிடம் வைத்துக்கொள்வது பயன்மிக்கதாகும்) |
|---|

09. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையானவையும் சரியானவையுமாகும் என கௌரவத்துடன் பிரகடனப்படுத்துகின்றேன். இதில் ஏதும் பகுதிகளை பூரணப்படுத்தாமல் மற்றும்/அல்லது பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படமுடியுமான நட்டத்தைத்தாங்கிக்கொள்ள இணங்குகின்றேன். மேலும், இதன் சகல பகுதிகளையும் எனது அறிவுக்கு எட்டிய வகையில் சரியாக பூரணப்படுத்தியுள்ளதாகப் பிரகடனப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள பிரகடனம் பொய்யானது என உறுதியானால், நியமிக்கப்பட முன்னராயின் தகுதியற்றவனாவேன் எனவும் நியமனம் பெற்ற பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

(இ) மேலும், இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுவதாகவும் உறுதி கூறுகின்றேன்.

(ஈ) இங்கு தரப்பட்டுள்ள எந்தத் தகவலையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

..........................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .......................................

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல்.

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு. / திருமதி / செல்வி .................................................................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் ................................................. ஆம் திகதி தனது கையொப்பத்தை இட்டார் எனவும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளதாகவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................................................
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

திகதி : .......................................

11. அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் : ..........................................................................................................

(i) பதவி :..........................................................................................................
(ii) முகவரி : ..........................................................................................................

..........................................................................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

12. அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்.

திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

இவ்விண்ணப்பதாரியான திரு. / திருமதி / செல்வி .................................................................................... தற்போது இந்த அமைச்சில்/ திணைக்களத்தில் ......................................................................................................... ஆக நிரந்தர/ தற்காலிக அலுவலராக பணிபுரிகின்றார் எனவும் அவருக்கு இப்பதவியின் பணிகளை மேற்கொள்ளும் தகைமை உள்ளது / இல்லை எனவும் தெரிவிக்கின்றேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இந்த அமைச்சில் / திணைக்களத்தில் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கின்றேன்.

..........................................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

பெயர் ..........................................................................................
பதவி ..........................................................................................
அமைச்சு / திணைக்களம் ..................................................................
திகதி ..........................................................................................

6-1084

---

திருத்தம்

**மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு**

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் நன்னடத்தை அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை - 2017, செத்தெம்பர்

2017.06.02 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2022 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் 06-25 ஆம் இலக்க அறிவித்தல்,

5. எழுத்து மூலமான பரீட்சை :

11. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும்.

எனத் திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

செயலாளர்,
மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு,
5 ஆம் மாடி, 'செத்சிறிபாய', கட்டம் II,
பத்தரமுல்லை.

6-912

## இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் தரம் மற்றும் II ஆம் தரத்தினையுடைய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016(II)

இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இணங்க மேற்படி பரீட்சைகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. (i) இப்பரீட்சைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன் இப்பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அத்தகைய விதிமுறைகள் அவர்களினால் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றுக்கு அவர்கள் உட்படல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள விதிகள், வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் வேறாக அச்சிடப்பட்டுள்ளது.

3. இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகள் தத்தம் விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் மத்திய அரச சேவையினுடைய அலுவலராயின் தமது திணைக்களத் தலைவர் ஊடாகவும் மாகாண அரச சேவையிலுள்ள இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் அலுவலராயின் அவர்கள் சேவையாற்றும் மாகாண சபையின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், ''பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503, கொழும்பு'' என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. **அடையாள அட்டைகள்**.- பரீட்சார்த்திகள், பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வண்ணம் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களில் ஒன்றையேனும் சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

5. **விண்ணப்பப்படிவம்**.- (i) ''ஏ4'' அளவிலான ஒரு தாளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இல. 1 முதல் 6 வரையிலான பந்திகளை முதலாம் பக்கத்திலும் ஏனையவற்றை மறுபக்கத்திலும் உள்ளடக்குதல் வேண்டும். விண்ணப்பங்களை தட்டச்சு செய்து தயாரித்துக்கொள்ள முடியுமாயினும் அவை பரீட்சார்த்திகளின் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் தாம் இப்பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் வேண்டும்.

(ii) விண்ணப்பத்தைத் தயாரிக்கின்றபோது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைவாகத் தயாரிக்கப் படாத விண்ணப்பங்களும், தகவல்கள் முழுமையாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலு மின்றி நிராகரிக்கப் படும். பரீட்சார்த்தி தான் நிரப்பிய விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை சோதித்தறிதல் வேண்டும். அத்துடன் அவ்விண்ணப்பப்பத்திரத்தின் படிமப் பிரதி யொன்றைத் தன்னிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

(iii) முதல் தடவையாக முழுப் பரீட்சைக்கும் அல்லது ஒரு பாடத்திற்கு தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதற்கு அடுத்த தடவைகளில் அலுவலர்கள் முழுப் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் 500 ரூபாவும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் 250 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும்படி இத்தீவிலுள்ள ஏதாவதொரு அஞ்சல் அலுவலகத்தில் அல்லது உப அஞ்சல் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். இப்பற்றுச்சீட்டின் படிமப்பிரதியொன்றை பரீட்சார்த்தி தன்னிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக

அமையும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சைக் கட்டணமாக முத்திரைகள் அல்லது காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iv) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஊடகங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவர்களுக்குப் பொருத்தமான ஒரு ஊடகத்தினைத் தெரிவுசெய்தல் வேண்டும் என்பதுடன் அவர்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரே மொழியிலேயே வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும். அவர்கள் விண்ணப்பித்த ஊடக மொழியினைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(v) **ஓர் அலுவலர் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே தடவையில் தோற்ற முடியாது.**

(vi) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் தரத்திற்கு உள்வாங்கப்பட்டவர்கள் முதலாம் தடைதாண்டற் பரீட்சைக்கும், II ஆம் தரத்திற்கு உள்வாங்கப்பட்டவர்கள் இரண்டாம் தடைதாண்டற் பரீட்சைக்கும் தோற்றுவதற்கும் முடியும்.

6. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ள பரீட்சார்த்திகள் மாத்திரம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளார்கள் என்னும் எடுகோளின் பேரில் பரீட்சை முடிவுத் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ மொழி மூலம், விண்ணப்பிக்கும் பரீட்சை, விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் மற்றும் திணைக்களத் தலைவரின் சான்றுறுதி என்பவற்றைக் குறிப்பிட்டு பொருத்தமுடையதாகவிருப்பின் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினையும் இணைத்து பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகளை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது கையொப்பத்தை உரியவாறு உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையினைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும் பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். பரீட்சைத் திணைக்களத்தினைத் தொடர்புகொள்ளும் வேளையில் பின்வருவனவற்றைத் தங்கள் கைவசம் வைத்துக்கொள்வது பயனுடையதாகவிருக்கும். அதாவது, தங்கள் கைவசமுள்ள விண்ணப்பப்படிவம், பற்றுச்சீட்டு ஆகியவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள், பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளியேயுள்ள பரீட்சார்த்தியாயின், அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஏனைய விபரங்களுடன் கோரிக்கைக் கடிதம் ஒன்று பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் ஒன்றுக்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

6. (i) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த நிறுவனம் ஒன்றுக்கூடாக விண்ணப்பிக்கும் பரீட்சார்த்தி ஒருவரின் கையொப்பமானது நிறுவனத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் அல்லது அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர்/ஓய்வுபெற்ற அலுவலர், பிரிவின் கிராமசேவையாளர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஓர் அலுவலர் அல்லது 2,40,360 ரூபாவிற்கும் கூடுதலான வருடாந்த திரட்டிய சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளும் அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ள பதவிநிலை அலுவலர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி, பிற மதத் தலைவர்கள் ஆகிய ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

7. மேற்படி (6) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

8. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாகவும் ஒவ்வொன்றுக்கு வேறுபட்ட தடவைகளிலும் தோற்ற முடியும். எனினும் சித்திபெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

9. **பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல்.**- இலக்கம் 3 இன்கீழ் மாகாண அரச சேவை அலுவலர்களின் பெறுபேறுகள் உரிய மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர்களுக்கும் மத்திய அரச சேவை அலுவலர்களின் பெறுபேறுகளை பொது நிர்வாக அமைச்சரின் செயலாளருக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

10. **பரீட்சை நடைமுறை :**

(1) III ஆம் தரத்தினைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டதாக அமைந்திருக்கும் :

பாட எண் (01) - தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் - (2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

பாட எண் (02) - நிதி ஒழுங்குவிதிகள் - (2 மணித்தியாலயம்) - 100 புள்ளிகள்

தாபன விதிக்கோவை மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் (பாட இலக்கம் 01) - பாடத்திட்டம்.- இவ்வினாத்தாள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் :

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | VIII | மேலதிக நேரப்படிகள், விடுமுறை நாட்களும் விடுமுறை நாட்களுக்கான சம்பளங்களும் படிகளும் |
| அத்தியாயம் | XII | விடுமுறை |
| அத்தியாயம் | XIII | புகையிரத ஆணைச்சீட்டுக்கள் |
| அத்தியாயம் | XIV | நாட்டினுள்ளே கடமை நிமித்தமான பிரயாணங்கள் |
| அத்தியாயம் | XIX | அரசாங்க வாசஸ்தலங்கள் |

நிதி ஒழுங்குவிதிகள் (பாட இலக்கம் 02) - பாடத்திட்டம்.- இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் :

(1) அத்தியாயம் I செலவின மற்றும் வருமான மதிப்பீடுகள்.- திரட்டு நிதி மற்றும் செலவுகளைத் திட்டமிடுதல், நிகழ்ச்சித்திட்டம் தயாரித்தல், வருடாந்த செலவு மதிப்பீடுகளைச் சமர்ப்பிக்கும் வடிவம், புதிய பிரேரணைகள், செலவு மதிப்பீடுகளைத் தயாரிக்கும் பொறுப்பு, செலவு மதிப்பீடுகளில் மாற்றங்கள் செய்தல் (நி. ஒ. 1 முதல் 68 வரை).

(2) அத்தியாயம் III - நிதி முகாமையும் வகைகூறலும்.- பிரதான கணக்கீட்டு அலுவலர்கள், கணக்கீட்டு அலுவலர்கள், அரசிறை கணக்கு அலுவலர்கள் கொடுப்பனவுக்காக அதிகாரமளித்தல், அங்கீகாரம் வழங்குதல், உறுதிப்படுத்தல் பணிகளை ஒப்படைத்தல் (நி. ஒ. 124 முதல் 147 வரை)

(2) II ஆம் தரத்தினைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும்.

பாட எண் (3) - தாபன விதிக்கோவை (நேரம் : 2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
பாட எண் (4) - நிதி ஒழுங்குவிதிகள் (நேரம் : 2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

தாபன விதிக்கோவை (பாட இலக்கம் 03) பாடத்திட்டம்.- இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் :

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | XV | கல்வி, பயிற்சி அல்லது கடமை நிமித்தம் மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணங்கள் |
| அத்தியாயம் | XVI | விடுமுறைப் பிரயாணங்கள் |
| அத்தியாயம் | XXIII | குறிப்பிட்ட வகை நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கும் அரசாங்க அலுவலர்கள் சம்பந்தமான விசேட சலுகைகளும் அது பற்றிய நிபந்தனைகளும் |
| அத்தியாயம் | XXIV | சம்பளக் கடன்களும் முற்பணங்களும் |
| அத்தியாயம் | XXV | தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| அத்தியாயம் | XXVII | கடிதத் தொடர்பு வழிமுறைகள் |
| அத்தியாயம் | XXVIII | நிர்வாக நடைமுறைகளும் நியதிகளும் |
| அத்தியாயம் | XXX | அரச அலுவலர்கள் மீதான அரசாங்கத்தின் அதிகாரங்கள் |
| அத்தியாயம் | XXXIII | சட்ட ஆலோசனையும் சட்ட நடவடிக்கைகளும் |
| அத்தியாயம் | XLVII | பொதுவான நடத்தைகளும் ஒழுக்கமும் |
| அத்தியாயம் | XLVIII | ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான விதிமுறைகள் |

நிதி ஒழுங்குவிதிகள் (பாட இலக்கம் 04) பாடத்திட்டம்.- இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் :

(i) அத்தியாயம் VI - அரசாங்க நிதி முதலியவற்றிற்கான பொறுப்பு, திரட்டு நிதி மற்றும் வங்கிக் கணக்குகள், உப படிவப் புத்தகங்கள், நிதி, முத்திரைகள் போன்றவை தொடர்பான தொகை மதிப்பீட்டுச் சபைகள், திரட்டு நிதி, வங்கிக் கணக்குகள் (நி. ஒ. 315 முதல் 396 வரை)

(ii) அத்தியாயம் XIII - வழங்கல்கள், வேலைகள் மற்றும் சேவைகள்.- பெறுகைகள் மற்றும் ஒப்பந்தங்கள்,

வழங்கல்கள், பொருட்களின் பொறுப்பு மற்றும் சரிபிழை பார்த்தல், மேலதிக பொருட்கள் மற்றும் பயன்படுத்த முடியாத பொருட்கள் (நி. ஒ. 685 முதல் 775 வரை)

11. இவ் அறிவித்தலின் ஏற்பாடுகள் செய்யப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின், பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

12. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்படலாகாது.

13. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கிடையில் யாதாயினும் உடன்பாடின்மை காணப்படுமிடத்து சிங்கள மொழியிலான வாசகமே செல்லுபடியானதாக அமையும்.

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2017, யூன் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்துக்கு மட்டும்)

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் தரம் மற்றும் II ஆம் தரத்தினையுடைய அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2016 (II)**

Efficiency Bar Examination Prescribed for Officers in Grade III and Grade II of Sri Lanka Technological Service - 2016(II)

(III ஆம் தரம் மற்றும் II ஆம் தரம் ஆகிய இரண்டிற்கும் ஒரே முறையில் விண்ணப்பிக்க முடியாது)

| பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : | தாங்கள் தோற்ற உத்தேசித்துள்ள பரீட்சை : |
|---|---|
| சிங்களம்-2<br>தமிழ்-3 [ ]<br>ஆங்கிலம்-4 | தரம் III - 0<br>தரம் II - 1 [ ] |
| (உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்) | (உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்) |

1. நீங்கள் மாகாண அரச சேவையைச் சார்ந்தவரா ? அல்லது மத்திய அரச சேவையைச் சார்ந்தவரா ? (தாங்கள் எச்சேவைக்கு உரியவரோ அச்சேவைக்குப் பொருத்தமான இலக்கத்தினைக் கூட்டினுள் குறிப்பிடுக) :----.

[ ]

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

(அரசாங்க சேவை - 10/மேல் மாகாண அரச சேவை - 01/மத்திய மாகாண அரச சேவை - 02/தென் மாகாண அரச சேவை - 03/ வட மாகாண அரச சேவை - 04/ கிழக்கு மாகாண அரச சேவை - 05/ வடமேல் மாகாண அரச சேவை - 06/வடமத்திய மாகாண அரச சேவை - 07/ ஊவா மாகாண அரச சேவை - 08/ சப்ரகமுவ மாகாண அரச சேவை - 09)

2. (அ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : Herath Mudiyanselage Saman Kumara Gunawardhana H. M. S. K.)

(ஆ) இறுதியாக வரும் பெயரை முதலாவதாகவும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதுக (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : Gunawardhana)

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. அலுவலக முகவரி (பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இம்முகவரிக்கு அனுப்பப்படும்) :

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(சிங்களத்தில்/ தமிழில்) :----.

4. பால் (ஆண்/ பெண்) :
ஆண் - 0
பெண் - 1 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. தோற்றும் பாடம்/ பாடங்கள் :

III ஆம் தரம்/ II ஆம் தரத்தின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்காகத் தோற்றும் பாடங்கள் (ஏற்புடையதாகாத சொற்களை வெட்டிவிடவும்) :

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| ........................... | [ ] |
| ........................... | [ ] |

7. தொலைபேசி இலக்கம் :

8. (i) பிறந்த திகதி :

வருடம் : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

(ii) *2017.07.31* ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : [ ][ ] மாதங்கள் : [ ][ ] நாட்கள் : [ ][ ]

9. (i) பதவிப் பெயர் :----.

(ii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் ...........................
(III/II ஆம் தரம் என்ற வகையில் உள்ளடக்க வேண்டும்.)

(iii) *2017.07.31* ஆந் திகதியிலுள்ளவாறு மேற்படி தரத்தில் சேவைக்காலம் :----.

10. நீர் சார்ந்துள்ள திணைக்களம் :----.

11. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அஞ்சல் அலுவலகம் :----.

(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.

(iii) செலுத்திய தொகை :----.

| |
|---|
| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும். (பற்றுச்சீட்டின் படிமப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.) |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை எனவும், மேலே குறிப்பிட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையவன் என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப் படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் பிரகடனப்படுத்துகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./திருமதி/செல்வி ................. ......................... என்பவர் .............................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதென்றும் அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர் :----.
பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையின் மூலம் உறுதிப்படுத்தவும்.)

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

மேலே இல. *1* முதல் *11* வரையான பந்திகளில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் சரியானவை என்றும், இப்பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்றும் அவரால் தரப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின்
கையொப்பமும் பதவிப்பெயரும்.
(உத்தியோகபூர்வ முத்திரையின்
மூலம் உறுதிப்படுத்தவும்).

திகதி :----.

*6-1136*

---

**கமத்தொழில் அமைச்சு**

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் II ஆம் வகுப்பிற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்வதன் பொருட்டான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

கமத்தொழில் அமைச்சிற்குரிய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு கீழ்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

*1.1* மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எண்ணியுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களின் பொருட்டும் *2017.06.30* ஆந் திகதியிலிருந்து *2017.07.31* ஆந் திகதிவரை விண்ணப்பப்

படிவங்கள் கோரப்படுகின்றன. 2017, ஒற்றோபர் மாதப் பகுதிக்குள் பரீட்சைத் திணைக்களத்தினால் பரீட்சை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவமானது இவ்வறிவித்த லுக்கு ஏற்புடையதான மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விடய இலக்கம் 1 தொடக்கம் 7 வரையில் முதலாம் பக்கத்திற்கும் விடய இலக்கம் 8 தொடக்கம் 12 வரையில் இரண்டாவது பக்கத்திற்கும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவம் நிரப்பப்படும்போது மிகவும் கவனத்திற்குரிய துல்லியமான தகவல்கள் வழங்கப்பட வேண்டும். இப்பரீட்சையின் விதிமுறை களுக்கமைய ஏதேனுமொரு விண்ணப்பதாரி தகைமையற்றவர் என உறுதிப்படுத்தப்படுமாயின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ தேவையான சந்தர்ப்பத்தில் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம்.

1.2 பரீட்சார்த்தி தான் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எண்ணியுள்ள மொழி மூலம், தனது சொந்தக் கையெழுத்தினால் விண்ணப்பப்படிவத்தை நிரப்புதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பத்தின் தலைப்பில் மொழி மூலத்திற்குரிய இலக்கத்தை தரப்பட்டுள்ள கூட்டினுள் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

1.3 விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடல் அத்தியா வசியமாகும்.

1.4 இப்பரீட்சை, பரீட்சை ஆணைளயாளர் நாயகத் தினால் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் அட்டவணை 1 இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும். அதற்கமைய பரீட்சைக்குத் தோற்றவுள்ள நகரத்தையும் அதற்குரிய இலக்கத்தையும் முதலாவது மற்றும் இரண்டாவது விருப்பத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தில் தலைப்பில் காட்டப்பட்டுள்ள கூட்டினுள் சரியாகக் குறிப்பிடல் வேண்டும். பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் நகரம்/ நகரங்களை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. ஏதாவதொரு நிலையத்தின் பொருட்டு போதுமானளவு விண்ணப்பதாரர்கள் இல்லையெனில் விண்ணப்பதாரியின் இரண்டாவது விருப்பத்திற்கமைய அல்லது அண்மித்த வேறு பரீட்சை நிலையமொன்றிற்கு இடமளிக்கப்படும். திட்டமிடப்பட்ட மாவட்டங்கள் அனைத்திலும் அல்லது மேலதிக எண்ணிக்கை அல்லது பரீட்சை நிலையம் அமைத்தலின் பொருட்டு போதுமான அளவு எண்ணிக்கையானோர் விண்ணப்பிக்கத் தவறும் பட்சத்தில் பரீட்சையானது கொழும்பில் நடாத்தப்படுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

1.4.1 "சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி களில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழி உரையில் ஏதேனும் பொருத்தமற்ற தன்மைகள் அல்லது உறுதியற்ற தன்மைகள் இருப்பதாகத் தென்படுமாயின் அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலுக்கமைய நடவடிக்கை மேற் கொள்ளப்படும்."

1.5 தனிப்பட்ட விண்ணப்பதாரிகளினால் நேரடியாகவும், அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத் தலைவர் ஊடாகவும் 2017.07.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம், பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் மட்டும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் :-

விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறை யின் இடதுபக்க மேல் மூலையில், "கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல அபி விருத்தி உத்தியோகத்தர் II ஆம் வகுப்பிற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017" எனக் குறிப்பிடல் வேண்டும்.

1.6 பரீட்சை அறிவுறுத்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவற்ற மற்றும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதால், விண்ணப்பப்படிவம் அனுப்புவதற்கு முன்னர் அது பரீட்சை அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா எனவும் அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய விண்ணப்பப்படிவம் பிழையின்றி பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றியும் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அவ்விபரம் விண்ணப்பப்படிவத்திற்கு உள்ளடக்கப்பட்டு அதன் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். (பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்பட பிரதியொன்றும் பரீட்சைக் கட்டணத்திற்குரிய பற்றுச் சீட்டின் நிழற்பட பிரதியொன்றும் விண்ணப்பதாரி தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும்.)

2. **சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகள் :**

2.1 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியக் கொடுப்பனவு நடைமுறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு உட்பட்டதாகும். விதவைகள், அநாதைகள்/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

2.2 பொதுச் சேவையின் நியமனம் தொடர்பான தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையிலான பிரிவுகளும் செயற்பாட்டு நடைமுறை விதிகளும் ஏற்புடையதாகும்.

2.3 தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப்பிரமாணத்திற்கும், திணைக்களக் கட்டளைகளுக்கும், காலத்திற்கு காலம் அரசினால் விடுக்கப்படும் ஏனைய சட்ட திட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கும் பணிதல் வேண்டும்.

3. **பொதுவான தகைமைகள் :**

3.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

3.2 சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

3.3 அனைத்து விண்ணப்பதாரரும் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை மேற்கொள்வதற்கும், போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

3.4 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று விண்ணப்பதாரர்களின் வயது 21 இற்குக் குறையாமலும் 35 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதன் பொருட்டு 1996.07.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1982.07.31 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டவர்கள் மட்டும் இதன் பொருட்டு விண்ணப்பிப்பதற்குத் தகுதியானவர்கள்.) ;

3.5 ஏதேனும் மதம் சார் பொறுப்புடைமை இருக்கின்ற எந்தவொருவருக்கும் இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கோ அல்லது தோற்றுவதற்கோ அனுமதியில்லை.

4. **கல்வித் தகைமைகள்.-** பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

5. **ஆட்சேர்ப்பு முறை :**

5.1 *எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் நிபந்தனைகள்.-* எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களைத் தெரிவுசெய்து, அவர்கள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளில் திறமை அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக் கைக்கமைய ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறும்.

5.2 *எழுத்துப் பரீட்சைக்குரிய பாடவிதானம்.-* பரீட்சை பிரதானமான இரு வினாத்தாள்களைக் கொண்டதாகும் :

(1) *கிரகித்தல் பரீட்சை.-* (காலம் : 1 1/ 2 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.

(2) *நுண்ணறிவுப் பரீட்சை.-* (காலம் : 1 1/ 2 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.
(சித்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடத்திற்கும், மொத்தப் புள்ளிகளில் 40% அல்லது அதற்கு மேலதிகமாக பரீட்சார்த்தியினால் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.)

5.3 தகைமைகளைப் பரிசீலனை செய்தலுக்கான சாதாரண நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

(1) *கிரகித்தல் பரீட்சை.-* இவ்வினாத்தாளின் மூலம் சுருக்கமான கூற்றுக்கள் பல, பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும். சில வினாக்கள் அதன் கருத்தை ஒரு வாக்கியத்தில் உரைக்கும் பொருட்டு வழங்கப்படும். கீழ் கோடிட்டுள்ள சொற்களுக்கான விளக்கமளிக்கும் வினாக்களும் வழங்கப்படும். மேலும் சில கூற்றுகள் தொடர்பாக பரீட்சார்த்திகளிடம் மாற்றுக் கருத்துக்கள் பல வழங்கப்படுவதுடன், அவற்றில் ஒன்று இக்கூற்றில் உள்ளடக்கப்பட்ட விடயங்களுக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கும். பரீட்சார்த்திகள் அதில் மிகவும் பொருத்தமான கருத்தினைத் தெரிவுசெய்தல் வேண்டும். மேலும் சில கூற்றுக்கள் தொடர்பாக பரீட்சார்த்திகளிடம் பல வினாக்கள் வழங்கப்படுவதுடன் அவற்றிற்கு சரியான பதில் வழங்கப்படுதல் எதிர்பார்க்கப்படும். இவ்வினாக்கள் பரீட்சார்த்திகள் இக்கூற்றின் கருத்தினைப் புரிந்து கொள்ளும் முறையினைப் பரிசீலனை செய்யும் பொருட்டு தயாரிக்கப்படும்.

(2) *நுண்ணறிவுப் பரீட்சை.-* இவ்வினாத்தாள், பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியிலான சிந்தனை ஆற்றல், சிந்தனையின் பகுப்பாய்வு நிலை, விவாதத் தேர்ச்சி மற்றும் தீர்மானமெடுத்தல் திறன் என்பனவற்றை மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்படும். இவ்வினாத்தாள் பல்தேர்வு மாதிரியிலான வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரமாகும். சகல வினாக்களுக்கும் பதிலளித்தல் வேண்டும்.

5.4 பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகள் மூலமும் நடாத்தப்படும். இவ்விண்ணப்பப்படிவத்தில் தாம் குறிப்பிடப் பட்டுள்ள மொழி மூலம் மாற்றப்படுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர் பரீட்சையின்போது தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியிலேயே பதிலளித்தல் வேண்டும்.

5.5 *பெறுபேறுகளை வெளியிடல்.*- எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்தின் பொருட்டும் 40% புள்ளிகள் அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ள பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகள் திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று அட்டவணை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்படும்.

அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேற்றுப் பத்திரம் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைப்பதற்கு அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தள முகவரியில் வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

6. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்).**- பொது நிர்வாக சுற்றறிக்கை 3/2016 இல் MN-05-2016 இன்கீழ் ரூபா 34,605 - 10 x 660-11 x 775-15 x 930 - ரூபா 63,460.

7. **பதவி உயர்வு நடைமுறைவிதிகள்.**- கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி ஆட்சேர்ப்பு நடைமுறை விதி உரித்துடையதாகும்.

8. **பரீட்சைக் கட்டணம்.**- விண்ணப்பதாரரினால் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டிய ரூபா 600 பணத்தை எந்தவொரு கமநல சேவைகள் நிலையத்திற்காயினும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், கமநல சேவைகள் நிலையத்தின் மூலம் பணத்தைப் பெற்றுக்கொண்டதற்கான க. சே. நி./ 2(அ) என்னும் பற்றுச்சீட்டு விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும். இப்பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். தொடர் தேவையின் பொருட்டு பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருத்தல் சாலச்சிறந்ததாகும். எக்காரணம் கொண்டும் இப்பணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.

9. **அரச மொழிக் கொள்கையை செயற்படுத்தல்.**- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/ 2014 இற்கமைய அல்லது அதற்கு தொடர்புடைய சுற்றறிக்கைக்கு அமைய பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டு 5 வருட காலத்திற்குள் குறித்த அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

10. **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்.**- விண்ணப் பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றில் அதிபரொருவர் அல்லது சமாதான நீதவானொருவரினால் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளரொருவரினால் அல்லது சட்டத்தரணியொருவரினால் அல்லது முப்படையின் அதிகாரம்பெற்ற அலுவலரொருவரினால் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அதிகாரியொருவர் அல்லது அரசாங்க சேவையின் நிரந்தர பதவிநிலைத் தரத்திலுள்ள அலுவலரொருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். பரீட்சை ஆரம்பமாகும் தினம் பரீட்சகரிடம் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக்கொண்ட அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு கையொப்பத்தை உறுதிப்படுத்தாத அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

11. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமை உடையவர்கள் மட்டும் கோரப்பட்டுள்ள அனைத்து தீர்மானத்திற்கமைய இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயதெல்லைக்குட்பட்டு, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அத்தினத்திற்கு முன்னதாக குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை அனுப்புகின்ற விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்பட்டதுடன், அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்தும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அது பற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளைக்கு முறையிடல் வேண்டும். அவ்வாறு முறையிடும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பவற்றைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்பிற்கு வெளியே வதிவினைக் கொண்டிருப்பின், அவ்விபரம் உள்ளடங்கலாக, தொலைநகல் மூலமாக பரீட்சை அனுமதி அட்டையின் பிரதியொன்றை விரைவில் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ப விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதமொன்றை தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்தல் பயனுள்ளதாக அமையும். அவ்வாறே முறையிடலின்போது பரீட்சைத் திணைக்களத்தினால், முறையீடு செய்யப்பட்டிருக்கின்ற ஏதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்திக்கொள்வதன் பொருட்டு தம்மிடமுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தினை பதிவுத்தபாலில் அனுப்பியதற்குரிய பற்றுச்சீட்டு என்பவற்றை தயாராக வைத்திருத்தலும் பயனுள்ளதாகும்.

12. பரீட்சார்த்தியொருவருக்கு அனுமதி அட்டையொன்றை வழங்குவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது பதவியின் பொருட்டு தகைமை உடையவர் என ஏற்றுக்கொண்டதாகக் கருதுதல் ஆகாது.

13. பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையை அல்லது குடியகல்வு குடிவரவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகியவை மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

14. பரீட்சை நடைபெறுதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்பட நேரிடும்.

டீ. வீ. பந்துலசேன,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் (பதில்).

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
த. பெ. இல. 537,
கொழும்பு 07,
2017, யூன் 15.

(அலுவலகப் பாவனைக்காக மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் II ஆம் வகுப்புக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக்கொள்வதன் பொருட்டான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

Open Competitive Examination for Recruitment to the Post of Agrarian Development Officer Grade II in the Department of Agrarian Development - 2017

| எழுத்துப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : |
|---|
| சிங்களம் - 2 |
| தமிழ் - 3 |

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

* பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகர இலக்கங்கள் (வர்த்தமானி அறிவித்தலின் இணைப்பின்கீழ் அட்டவணை 1 ஐப் பார்க்கவும்.) :

| | மாவட்டம் | மாவட்ட இல. |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்தை இறுதியில் குறிப்பிட்டு ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உ-ம் : SUNIL, A.B.)

(ii) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில் அல்லது தமிழில்) :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ii) அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி, (ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

4. பால் : ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

5. (i) பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

(ii) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

6. விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :----.

விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

7. தொலைபேசி இலக்கம் :

8. (i) பெற்றுக்கொண்டுள்ள பட்டமும் வருடமும் :----.
(ii) பட்டம் பெற்றுள்ள பல்கலைக்கழகம் :----.
(iii) சித்தியின் தன்மை : (i) சாதாரணம்/ கௌரவ I ஆம் வகுப்பு/ II ஆம் வகுப்பு (மேல்/ கீழ்)
(ii) விசேட/கௌரவ I ஆம் வகுப்பு/II ஆம் வகுப்பு (மேல்/ கீழ்)
(iv) உரிய பாடங்கள் :----.

9. பரீட்சைக் கட்டணம் :

(i) கட்டணம் செலுத்தப்பட்ட கமநல சேவை நிலையம் : ----.
(ii) செலுத்தப்பட்ட பணம் :----.
(iii) செலுத்தப்பட்ட திகதி :----.
(iv) பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| பற்றுச்சீட்டை இக்கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும். (பற்றுச்சீட்டுப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) |
|---|

10. **விண்ணப்பதாரரின் உறுதியுரை**.- மேலே குறிப்பிடப் பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தவரையில் உண்மை யானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன். மேலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் தவறானதும் உண்மையற்றதும் எனத் தெரியவருமாயின், அத்தெரிவு நியமனத்திற்கு முன்னர் தெரியவருமாயின், நான் தகுதியற்றவன் எனவும், நியமனத்தின் பின்னர் தெரியவருமாயின் எவ்விதமான நஷ்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து

நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளரினால், பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பாகக விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பெறுபேறுகள் வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் அமைந்தொழுகுவதாகவும் உறுதியுரைக்கின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.- இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ..............................என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் .............................. ஆந் திகதி தனது கையொப்பத்தை இட்டார் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின்,
பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களின் பொருட்டு மட்டும்)

திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

12. இவ்விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி ........ ........................................................ என்பவர் தற்போது இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் ............................ ............................ ஆக நிரந்தர/ தற்காலிக/ அமைய உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றார் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அதன் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதெனவும் அவர் இப்பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுவாராயின் சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் அறியத் தருகிறேன்.

...................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை).

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**அட்டவணை 1**

பரீட்சை நிலையம் அமைய வேண்டிய மாவட்ட இலக்கத்தைக் கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் இருந்து தெரிவுசெய்க.

இப்பரீட்சை கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தமது வதிவிட முகவரிக்கு அண்மித்த மாவட்டத்தைத் தமது பரீட்சை நிலையமாக தெரிவுசெய்ய வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாவட்டம் மற்றும் மாவட்டங்களின் இலக்கம் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணைக்கு அமைய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட வேண்டும். விண்ணப்பிக்கும் மாவட்டம் பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| *மாகாணம்* | *மாவட்டம்* | *மாவட்ட இலக்கம்* |
|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | 01 |
| | கம்பஹா | 02 |
| | களுத்துறை | 03 |
| மத்திய மாகாணம் | கண்டி | 04 |
| | மாத்தளை | 05 |
| | நுவரஎலிய | 06 |
| தென் மாகாணம் | காலி | 07 |
| | மாத்தறை | 08 |
| | அம்பாந்தோட்டை | 09 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 10 |
| | மன்னார் | 11 |
| | வவுனியா | 12 |
| | முல்லைத்தீவு | 13 |
| | கிளிநொச்சி | 14 |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 15 |
| | அம்பாறை | 16 |
| | திருகோணமலை | 17 |
| வடமேல் மாகாணம் | குருநாகலை | 18 |
| | புத்தளம் | 19 |
| வடமத்திய மாகாணம் | அனுராதபுரம் | 20 |
| | பொலொன்னறுவை | 21 |
| ஊவா மாகாணம் | பதுளை | 22 |
| | மொனறாகலை | 23 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 24 |
| | கேகாலை | 25 |

06-1163

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.